## மேலதிக உதவி நிலையங்கள்

**மன ரீதியான உதவி**

நீங்கள் உடனடியாக கலந்துரையாடலுக்கு ஒருவரைத் தேடுவீர்களாக இருந்தால், அதற்காக எந்த நேரத்திலும் உதவி வழங்கக்கூடிய கரங்களை தொலைபேசி இலக்கம் 143 ல் அழைக்க முடியும்.

**பண ரீதியான உதவி**

கருவுற்ற வேளையில் ஏற்படும் அவசர தேவைகளின்போது, பல்வேறு தனிப்பட்ட அல்லது மத ரீதியான அமைப்புகள் மேலதிக உதவிகளை வழங்குகின்றன.

**Solidaritätsfonds für Mutter und Kind**
**Schweizerischer Katholischer Frauenbund**
Kasernenplatz 1
6000 Luzern 7
Telefon 041 226 02 27
www.frauenbund.ch

**Muttertagsfonds –**
**Aargauer Katholischer**
**Frauenbund**
Geschäftsstelle
Neustrasse 51
5430 Wettingen
056 668 26 42
www.frauenbund-aargau.ch

**Stiftung Hilfe für Mutter und Kind**
**der Reformierten Landeskirche**
Hintere Hauptgasse 15
4800 Zofingen
Telefon 079 273 97 50
www.ref-ag.ch

## பிறந்த பிள்ளையை தத்தெடுப்பதற்காக வழங்குவதற்கான வசதிகள் குறித்த தகவல்

நீங்கள் ஒன்றில் கருவுற்றோருக்கான உத்தியோகபூர்வ ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள் அல்லது நேரடியாக தொடர்பு கொள்ளுங்கள்:

**Pflege- und Adoptivkinder Schweiz**
Pfingstweidstrasse 16
8005 Zürich
044 205 50 40
www.pa-ch.ch

---

**Impressum**
Herausgeber: Departement Gesundheit und Soziales, Abteilung Gesundheit
5001 Aarau, www.ag.ch
Copyright © 2018 Kanton Aargau

KANTON AARGAU

# வழிகாட்டி
## விருப்பமில்லாமல் கருவுற்றுள்ளீர்களா?

**Departement**
**Gesundheit und Soziales**

Version: Tamil

## ஆலோசனை பெறுவதற்கு உங்களுக்கு உரிமையுண்டு- இலவசமாக, நடுநிலையாக மற்றும் நம்பிக்கையாக

விருப்பமில்லாத கருவுற்ற நிலை பல கேள்விகளை, எதிர்மறையான உணர்வுகளை மற்றும் பயத்தைத் தோற்றுவிக்கலாம். மத்திய அரச சட்ட அமைப்பின்படி இப்படியான சந்தர்ப்பத்தில் இலவசமான ஆலோசனை மற்றும் உதவிகளைப் பெற்றுக்கொள்வதற்கு உரிமையுண்டு, அதாவது கருவை தொடர்ந்து சுமப்பதற்கோ அல்லது அதைக் கலைப்பதற்கோ விருப்பம் எதுவாக இருப்பினும் இதை மேற்கொள்ளலாம்.
நீங்கள் முடிவெடுப்பதற்கு மேலும் அவகாசம் தேவைப்பட்டால் அல்லது உங்கள் தனிப்பட்ட நிலைமை குறித்து ஒரு மனம்திறந்த கலந்துரையாலை விரும்பும் ஒரு சிக்கலான நிலையில் இருப்பீர்களானால், கருவுற்றோருக்கான உத்தியோகபூர்வ ஆலோசனை நிலையத்தைத் தொடர்பு கொள்ளுங்கள், அவர்கள் உங்களுக்கு சமூக, உளவியல், நிதி மற்றும் சட்ட ரீதியான கேள்விகளுக்கு மேலதிக உதவிகளை வழங்குவார்கள்.
நீங்கள் ஒரு சரியான முடிவை எடுப்பதற்கு, இப்படியான ஆலோசனை உங்களுக்கு உதவ முடியும். நீங்கள் இந்த ஆலோசனை நிலையத்தை, கருவைக் கலைத்த பின்பாகவோ அல்லது கருத்தடை குறித்த கேள்விகளுக்காகவோ நாடலாம்.

**நீங்கள் விரும்பினால், உங்கள் துணைவருடனோ அல்லது உங்களுக்குப் பொறுப்பான நபருடனோ ஆலோசனைக்கு வருகை தரலாம்.**

## நீங்கள் ஒரு அவசர நிலைமையில் உள்ளீர்களா?

நீங்கள் கருவுற்றுள்ளதை மற்றும் பிறப்பை எவரும் அறியக்கூடாது என்ற நிலையில் உள்ளீர்களா. Aargau மாநில வைத்தியசாலையில் கருவுற்றிருக்கும் காலத்தில் மற்றும் பிறப்பின் பின்பு (நம்பிக்கையான ரீதியில்) மருத்துவ மற்றும் உளவள ஆலோசனைகளை நீங்கள் பெற்றுக்கொள்ளலாம். அதாவது உங்களது அயல் வட்டம் பிறப்பு விடயத்தை அறிந்துகொள்ளாத வகையில், நீங்கள் உங்கள் பிள்ளையை நம்பிக்கையான ரீதியில் உலகில் பிரசவிக்கலாம். நீங்கள் வைத்தியசாலையில் பதியும்போது உங்கள் பெயர் விபரங்கள் மறைவாக வைக்கப்படுவதுடன் வைத்தியசாலையில் நீங்கள் இருப்பது குறித்து மூன்றாம் நபர்கள் எவருக்கும் தெரியப்படுத்தப்பட மாட்டாது. நீங்கள் நம்பிக்கையான வகையில் பிரசவிக்க வேண்டும் என்பதில் தங்கியிருப்பீர்களானால், Aargau மாநிலத்திலுள்ள வைத்தியசாலை ஒன்றில் பிறப்பிற்கு உதவிடும் பகுதியை உரிய காலத்துடன் தொடர்பு கொள்ளுங்கள்.

## கருவைக் கலைப்பதற்கு நீங்கள் முடிவெடுத்து விட்டீர்கள்.

இப்படியான ஒரு நிலையில் உங்கள் ஆண்/பெண் வைத்தியர் உங்களுடன் ஒரு விளக்கமான கலந்துரையாடலை மேற்கொள்வதுடன், உங்களுக்கு சட்ட விதிகள் மற்றும் கருக் கலைப்பதினால் ஏற்படக்கூடிய உடல் நல ஆபத்துகள் குறித்து அறியத்தருவதுடன் ஆலோசனை நிலையங்களின் முகவரி அடங்கிய இவ் வழிகாட்டியை உங்கள் கையொப்பத்தைப் பெற்றபின் உங்களுக்கு வழங்குவார்.

இதில் சம்பந்தப்பட்ட பெண்ணாகிய நீங்கள் மட்டுமே இறுதியாக கருவை சுமப்பதா அல்லது கலைப்பதா என இறுதித் தீர்மானம் எடுக்க முடியும் என்பதுடன் விரும்பும் பட்சத்தில் பிள்ளையை தத்தெடுப்பதற்காக வழங்குவதற்கு தீர்மானிக்க முடியும்.

## நீங்கள் 16 வயதிற்கு உட்பட்டவர்

நீங்கள் 16 வயதிற்கு உட்பட்டவர் என்பதுடன் கருவைக் கலைக்க விரும்புகின்றீர்கள், அப்படியானால் நீங்கள் மேலதிகமாக ஒரு இளையோருக்கான துறைசார் ஆலோசனை நிலையத்திலுள்ள ஒரு ஆண் அல்லது பெண் வைத்தியரிடம் விளக்கமான ஒரு ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்விதமான ஒரு ஆலோசனை கட்டாயமானதாகும். இவ்விதமான இள வயதினருக்கான ஆலோசனைகளும் நம்பிக்கையானது, இலவசமானது மற்றும் இரகசியக் காப்புக்கு உட்பட்டதாகும்.

## தத்தெடுத்தல்

ஒரு பிள்ளை பிறந்த பின்பு அதை தத்தெடுப்பதற்குக் கொடுப்பதென்பது, ஒரு மிகக் கடினமான முடிவு, இதை கலந்துரையாடல்கள் இல்லாமல் நிறைவேற்றுவது முடியாததொன்றாகும். ஆகவே இந்த வசதிக்காகவே ஆலோசனை நிலையங்கள் உள்ளன. அவைகளின் முகவரிகளையும் இந்த வழிகாட்டியில் நீங்கள் காணலாம்.

---

## Aargau மாநிலத்தின் கருவுற்றவர்களுக்கான உத்தியோகபூர்வ ஆலோசனை நிலையம்

**Sexuelle Gesundheit Aargau**
**Fachstelle für Sexualität, Schwangerschaft,**
**sexuell übertragbare Krankheiten und sexuelle Bildung**
Entfelderstrasse 17
5000 Aarau
Telefon 062 822 55 22
www.seges.ch
info@seges.ch

**தொலைபேசியில் தீர்மானித்த பின்பாக சந்திப்பதற்கான தவணை வழங்கப்படும்**

## கருவுற்ற பெண்கள் 16 வயதிற்கு உட்பட்டிருந்தால்

கருவைக் கலைப்பதற்கு முன்பாக இந்த ஆலோசனை **கட்டாயமானதாகும்.**

Aargau மாநிலத்தில் மேலே குறிப்பிட்டுள்ள கருவுற்றவர்களுக்கான உத்தியோகபூர்வ ஆலோசனை நிலையம் 16 வயதிற்கு உட்பட்ட கருத்தரித்த பெண்கள் ஆலோசனை பெறுவதற்காக நியமனம் பெற்றுள்ளது.

இந்த முகவரியை நீங்கள் மேலே காணலாம்.

---